**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DVC.No.12/2024**

**PW.1**

**நாள்: 20.05.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ஜோதி கமல பிரபா | வயது | 38 |
| கணவர்/தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | வட்டம் | |

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை;**

2. என்னுடைய மனுவின் பத்தி 2 ல் எதிர்மனுதாரின் மாத சம்பளம் ரூ.1,90,000/- என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அது சரியா என்றால் சரிதான். என்னுடைய மாத சம்பளம் ரூ.1,40,000/- என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட எதிர்மனுதாரரின் மாத சம்பளம் மற்றும் என்னுடைய மாத சம்பளம் என்பது மொத்த சம்பளமா அல்லது பிடித்தம் போக கையில் வாங்கும் தொகையா என்றால் நான் கையில் வாங்கும் தொகையை தான் குறிப்பிட்டுள்ளேன். எதிர்மனுதாரர் என்னிடம் மாத சம்பளம் என்று கூறிய விவரத்தை தான் குறிப்பிட்டுள்ளேன். நான் எதிர்மனுதாரரின் மொத்த மாத சம்பளத்தை மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் நான் என்னுடைய மொத்த சம்பளம் விவரத்தை குறிப்பிடாமல் கையில் வரும் மாத ஊதியத்தை மட்டும் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

3. என்னுடைய ஆண்டு ஊதியம் ரூபாய் 20 லட்சம் என்றால் சரிதான். என்னுடைய பணி நியமன உத்தரவு எனது ஆவணமாக தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை மாத சம்பளப் பட்டியலை தாக்கல் செய்துள்ளேன். நான் மூன்று ஆண்டுகளாக வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் 2018, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் பத்தி 2ல் வீட்டு செலவுகள் குழந்தையின் கல்வி மற்றும் Extra Curricular activities உள்ளிட்டவற்றையும் நான் தான் பார்த்து வந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தான் எனது மகளின் பள்ளி கட்டணத்தை இதனால் வரையில் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் ஒன்றாக வாழ்ந்த காலம் வரையில் என்னுடைய மாத சம்பளத்தை எதிர்மனுதாரரின் வங்கி கணக்கிற்கு அனுப்புவதை தான் அவர் மீண்டும் பள்ளி கட்டணமாக செலுத்துவார்.

4. இந்த மனுவை தாக்கல் செய்த பிறகு எதிர்மனுதாரர் தான் செலுத்தி வருகிறார். நான் டிசிஎஸ்ல் எந்த ஆண்டு வரை பணிபுரிந்து வந்தேன் என்றால் 2022 ஜூன் மாதம் வரை பணிபுரிந்து வந்தேன். நான் டிசிஎஸ்–ல் இருந்து விலகியபோது என்னுடைய மாதம் சம்பளம் என்ன என்றால் ஆண்டிற்கு சுமாராக ரூ9,00,000/ பெற்று வந்தேன். 2024 வரையில் குழந்தையின் பள்ளி கட்டணத்தை முழுவதையும் நான் தான் செலுத்தி வந்தேன் என்றால் ஆமாம். எனக்கு 2015 அக்டோபர் மாதம் காலில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை வற்புறுத்தி தான் திருமணம் செய்து கொண்டார் என்றால் என்னுடைய காலில் காயம் ஏற்பட்டதால் கொஞ்சம் நாட்கள் கழித்து திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று எங்கள் வீட்டில் சொன்னார்கள். எதிர்மனுதாரர் என்னிடம் கொஞ்சம் நாட்களில் திருமணம் செய்து கொள்ளவில்லை

என்றால் நாம் இருவரும் ஓடி சென்று பதிவு திருமணம் செய்துகொள்ளலாம் என்று சொன்னார்.

5. எதிர்மனுதாரர் அரபு நாட்டில் இருந்து இந்தியா வந்தபோது வேலை இல்லாமல் இருந்தார் என்றாலும் என்னுடைய பெற்றோர் தான் எவ்வித காரணமின்றி ஒரு வருடம் காலம் கழித்து திருமணம் வைத்து கொள்ளலாம் என்றால் எங்கள் திருமணம் காதல் பெரியோர் நிச்சயத்தின் திருமணம் என்பதால் எதிர்மனுதாரர் குறித்து தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக தான் என் பெற்றோர் அவ்வாறு சொன்னார்கள். 2017 ஆம் ஆண்டு மே மாதம் ஒரு நாள் எதிர்மனுதாரர் என்னை அறைந்ததாக மனு பத்தி 9 ல் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதற்காக நான் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய எதிர்காலத்திற்காகவும் என்னுடைய குழந்தையின் எதிர்காலத்திற்காகவும் நான் அவ்வாறு புகார் ஏதுவும் கொடுக்கவில்லை.

6. என்னுடைய மனு பத்தி 10 ல் எதிர்மனுதாரர் என் மகளை அடிக்க ஆரம்பித்தார், நிறுத்த மாட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அப்போது என் மகளின் வயது என்ன என்றால் எல்.கே.ஜீ படிக்கும்போது அவ்வாறு செய்தார். என்னுடைய மனு பத்தி 12 ல் டிசம்பர் 2019 ல் எதிர்மனுதாரர் என்னை மீண்டும் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதற்காக புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் அப்போதும் நான் அவசரம் படவேண்டாம் என்பதற்காக தான் புகார் கொடுக்கவில்லை. அது சம்பந்தமாக எங்கள் வீட்டு பெரியோர்களிடமும் நான் எதுவும் முறையிடவில்லை. நான் அவ்வாறு முறையிட்டால் எதிர்மனுதாரருக்கு மேலும் கோபம் ஏற்படும் என்பதால் நான் பெரியோர்களிடமும் முறையிடவில்லை.

7. கடந்த 2016 ஆண்டு மே மாதம் நான் கருவுற்றபோது மருத்துவரை சந்தித்தேன் என்றாலும் அப்போது மருத்துவர் எனது உடல் எடை காரணமாக நான் கருவுற்று இருக்கக்கூடாது என்று ஆலோசனை வழங்கினார் என்றால் சரிதான். நானும் அப்போது கருவுறாமல் இருந்து இருக்கலாம் என எண்ணினேன் என்றால் சரியல்ல. நான் 2 வது முறை எப்போது கருவுற்றேன் என்றால் 2020 ஆம் ஆண்டு கருவுற்றேன். ஆனால் அப்போதும் என்னுடைய உடல் எடை மற்றும் தைராய்டு குறைபாடு காரணமாக நான் கருவுற்று இருக்க கூடாது என மருத்துவர் ஆலோசனை வழங்கினார் என்றால் சரியல்ல. மருத்துவர் என்னை கருக்கலைக் வேண்டாம் என்றும் குழந்தை பெற்று கொள்ளவேண்டும் தான் கூறினார். எனக்கு அதில் விருப்பம் இல்லை. எதிர்மனுதாரர் தான் வற்புறுத்தி அழைத்து சென்றார்.

8. நான் அதற்கு மறுத்தால் அவர் என்னை அடிப்பார் என்று எண்ணி தான் நான் சென்றேன். மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொள்ளும்படி சொன்னார்கள். ஆனால் எதிர்மனுதாரர் மாத்திரை மட்டும் போது என்று சொல்லி என்னை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். அதன்பின் வேலைக்கும் சென்று விட்டார். நான் என்னுடைய மனுவில் குழந்தை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக முன்னுக்கு பின் முரணமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் முறை கருவுற்றபோது பார்க்க சென்ற மருத்துவர் என் உடல் எடையை காரணம் காட்டி நீ எவ்வாறு கருவுற்றாய் என்று என்னை கேள்வி எழுப்பினார். ஆனால் அப்போதும் நான் பூரண உடல் நலத்துடன் தான் இருந்தேன். 2 வது முறை கருவுற்றபோது மருத்துவர் என் உடல்நலம் நன்றாக தான் உள்ளது என்றும், குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என்றும் சொன்னார்.

9. நானும் எதிர்மனுதாரரும் 2009 – 2016 காலம் வரையில் நல்ல நண்பர்கள் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரரை வற்புறுத்தி மனநல மருத்துவரிடம் ஆலோசனைக்கு செல்லும்படி அழைத்தேன் என்றால் எதிர்மனுதாரர் ஒவ்வொரு முறையும் என்னுடன் சண்டையிட்டு அடிப்பார். அதன் பிறகு அவரே என்னிடம் நான் அவ்வாறு கோபப்பட்டு இருக்க கூடாது என்றும், ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறேன் என்று தெரியவில்லை என்று அவரே என்னிடம் பலமுறை சொன்னதால் நான் அவ்வாறு சொன்னேன். அவருக்கு விருப்பம் இருந்தால் செல்லலாம் என்று சொன்னேன். நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்துதான் மருத்துவர் மோகன்ராவ் என்பவரிடம் காணொளி வாயிலாக ஆலோசனை பெற்றோம் என்றால் சரிதான்.

10. அந்த மருத்துவர் எனக்கு ஒரு மாத்திரையை பரிந்துரைத்தார் என்றால் எங்கள் இருவருக்குமே அவர் மாத்திரை வழங்கினார். எதிர்மனுதாரரின் தொடர் துன்புறுத்தல் காரணமாக என் உடல்நலம் மிகவும் நலிவுற்றது. அது சம்பந்தமாக நான் அவரிடம் ஆலோசனை கேட்டபோது தான் அவர் எனக்கு மாத்திரை வழங்கினார்.

**வேண்டுக்கோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

NILAVARASAN KASI    Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,

Thiruporur.